RNI NO:TNTAM/2021/82250 www.dinamadai.com

வெளியீட்டாளர்: மு.ஹிட்லர் சுந்தர்ராஜன் எம்.ஏ.,
dinamadai2021@gmail.com

# தின மடை

DINAMADAI MORNING DAILY மறைக்கப்பட்ட செய்தி திறக்கப்படும்.., தமிழ் காலை நாளிதழ்

Chennai VOLUME : 02 Issue : 276 10.07.2023 Monday page-4 Rs.5

சென்னை மலர்-02 இதழ் -276 10.07.2023 திங்கள் பக்கம்-4 விலை -5

## தி.மு.க. ஆட்சிக்கு ஆபத்து வந்தாலும் கவலை இல்லை முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் பரபரப்பு பேச்சு



சென்னை: சென்னை, அண்ணா அறிவாலயத்தில் திராவிட இயக்க எழுத்தாளர் திருநாவுக்கரசு இல்லத்திருமண விழா நடைபெற்றது. முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் கலந்து கொண்டு மணமக்கள் சிற்றரசு எழிலரசி திருமணத்தை நடத்தி வைத்தார். அப்போது முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் பேசியதாவது: இன்றைக்கு இந்தியாவிற்கு ஆபத்து வந்திருக்கிறது. ஆபத்து என்று சொல்வதை விட பேராபத்து வந்திருக்கிறது. எனவே அப்படிப்பட்ட அந்த பேராபத்திலிருந்து நாம் இந்த நாட்டைக் காப்பாற்ற வேண்டிய கட்டாயத்தில் இருந்து கொண்டிருக்கிறோம். இன்றைக்கு நாம் அறிவித்திருக்கும் திட்டங்களை நிறைவேற்றிக் கொண்டிருக்கும் அந்தத் திட்டங்களைப் பார்த்து விமர்சனம் செய்து கொண்டிருப்பவர்களைப் பார்த்து நான் கேட்க விரும்புவது, இதே பி.ஜே.பி. ஆட்சி 2014ம் ஆண்டு பொறுப்பேற்பதற்கு முன்னால் தேர்தலுக்கு முன்னால் அறிவித்த உறுதிமொழிகளில் ஏதாவது ஒன்று நிறைவேற்றப்பட்டிருக்கிறதா? நான் ஆட்சிக்கு வந்தால் என்று இன்றைக்குப் பிரதமராக இருக்கும் மோடி சொன்னது, வெளிநாட்டில் இருக்கும் கருப்பு பணங்களை எல்லாம் நான் மீட்டுக்கொண்டு வந்து, அவற்றை எல்லாம் நாட்டில் இருக்கும் மக்களுக்கு ஒரு தலைக்கு ஒரு நபருக்கு 15 லட்சம் ரூபாய் வழங்குவேன் என்று உறுதிமொழி தந்தார். பதினைந்து லட்சம் வேண்டாம், பதினைந்து ஆயிரமாவது வழங்கியிருக்கிறாரா? பதினைந்து ஆயிரம் வேண்டாம், 15 ரூபாயாவது வழங்கியிருக்கிறாரா? கிடையாது. இதுவரை அதைப் பற்றிச் சிந்திக்கவே இல்லை, அதைப் பற்றிக் கேட்கவே இல்லை. அதைப் பற்றி பேசவே இல்லை. மாதம் 2 கோடி பேருக்கு வேலைவாய்ப்பை உருவாக்கித் தருவோம் என்றெல்லாம் உறுதிமொழி தந்தார்கள். ஆனால் அந்த உறுதிமொழிகள் எல்லாம் காற்றில் பறக்க விடப்பட்டுக் கொண்டிருக்கிறது. அதேபோல் விவசாயிகள் நலனை பாதுகாப்போம் என்று சொல்லி ஆட்சிக்கு வந்தவர்கள், இதே டெல்லி மாநகரத்தில் இந்தியாவின் தலைநகரத்தில் விவசாயிகள் ஒன்றுகூடி மிகப்பெரிய போராட்டத்தை, ஆண்டு கணக்கில் நடத்தி, நூற்றுக்கணக்கானோர் உயிரிழந்த அந்த கொடுமைகள் எல்லாம் நடந்தது. கடுமையான குளிரில் கொடுமையான வெயிலில் மழையில் பல்வேறு சித்ரவதையை ஏற்றுக்கொண்டு அந்த போராட்டத்தை நடத்தியபோது அதை பற்றி கண்டும் காணாமல் இருந்த ஆட்சி பி.ஜே.பி. ஆட்சி. அதற்குப் பிறகு வேறு வழியில்லாமல் ஓரளவிற்கு அதை ஏற்றுக் கொள்ளும் சூழ்நிலையை அவர்கள் பெற்றார்கள். எனவே இதையெல்லாம் உணர்ந்துதான், இப்படிப்பட்ட ஒரு மோசமான சர்வாதிகார ஆட்சியை அப்புறப்படுத்த வேண்டும் என்பதற்காகத்தான், இன்றைக்கு இந்தியாவில் இருக்கும் எதிர்க்கட்சிகள் எல்லாம் ஒன்று சேர்ந்து ஒரு நல்ல முடிவை இந்திய நாட்டிற்கு ஏற்படுத்தித் தர வேண்டும் என்ற ஒரு நல்ல எண்ணத்தோடு, அண்மையில் பீகார் மாநிலத்தில் பாட்னாவில் அங்கிருக்கும் முதலமைச்சர் நிதிஷ் குமார் முயற்சியின் காரணமாக எதிர்க்கட்சிகளை சார்ந்த அனைத்துக் கட்சி கூட்டம் நடைபெற்றது. யார் ஆட்சிக்கு வரவேண்டும் என்பதைவிட, யார் ஆட்சி இருக்கக்கூடாது என்பதில் கவனமாக இருக்க வேண்டும் என்ற அந்த ஒரு கருத்தை அடிப்படையாக வைத்து அந்த கூட்டம் நடைபெற்றிருக்கிறது. தொடர்ந்து வருகின்ற 17, 18 ஆகிய தேதிகளில் கர்நாடக மாநிலத்தில் பெங்களூரு நகரத்தில் நடைபெறவிருக்கும் கூட்டம் ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. எனவே இதைல்லாம் பார்த்து எரிச்சல் பட்டுக்கொண்டிருக்கும் பி.ஜே.பி. ஆட்சி, குறிப்பாக அதன் தலைமைப் பொறுப்பில் இருக்கும் பிரதமர் மோடி, இன்றைக்கு பிரதமர் என்ற அந்த நிலையிலிருந்து மறந்து ஏதேதோ பேசிக் கொண்டிருக்கிறார், உளறிக் கொண்டிருக்கிறார். அதைப்பற்றி எல்லாம் நாம் கவலைப்பட வேண்டிய அவசியம் இல்லை. இதனால் எந்த சூழ்நிலை வந்தாலும், ஏன் ஆட்சிக்கே ஆபத்து வந்தாலும் அதைப்பற்றி இம்மியளவும் நாம் கவலைப்பட வேண்டிய அவசியம் இல்லை. நம்முடைய கொள்கை நம்முடைய லட்சியம் ஒரே ஒரு கொள்கையாக இருக்க வேண்டும் என்பதை மட்டும் மனதில் வைத்து, வரும் பாராளுமன்ற தேர்தலில் மிகப்பெரிய வெற்றியை பெறுவதற்கான முயற்சிகளில் நாம் முழுமையாக ஈடுபட வேண்டும் என்று அந்த அடிப்படையில்தான் இன்றைக்கு நாம் இந்த களத்தில் இறங்கி இருக்கிறோம். இவ்வாறு அவர் பேசினார்

## ராஜஸ்தானில் ரூ.24,300 கோடி மதிப்பிலான திட்டங்களை தொடங்கி வைத்தார் பிரமதர் மோடி




ராஜஸ்தானின் பிகானேர் மாவட்டத்தில் ரூ. 24,300 கோடி மதிப்பிலான வளர்ச்சித் திட்டங்களுக்கு பிரதமர் நரேந்திர மோடி நேற்று அடிக்கல் நாட்டினார். அமிர்தசரஸ்ஜாம்நகர் பொருளாதார வழித்தடத்தின் ஆறு வழி பசுமையான விரைவுச் சாலைப் பகுதியையும், பசுமை ஆற்றல் வழித்தடத்திற்கான மாநிலங்களுக்கு இடையேயான டிரான்ஸ்மிஷன் லைனின் முதல் கட்டத்தையும், பிகானரில் இருந்து பிவாடிக்கு டிரான்ஸ்மிஷன் லைனையும், 30 படுக்கைகள் கொண்ட மாநில இஎஸ்ஐசி மருத்துவமனை ஆகிய திட்டங்களை பிரதமர் மோடி மக்களுக்கு அர்ப்பணித்தார். பிகானேர் ரயில் நிலையத்தின் மறுவடிவமைப்பு மற்றும் 43 கிமீ நீளமுள்ள சுருரதன்கர் பிரிவின் இரட்டிப்பாக்கத்திற்கும் அவர் அடிக்கல் நாட்டினார். பிகானேரில் உள்ள நோராங்தேசரில் நடந்த நிகழ்ச்சியில் பிரதமர் மோடி காணொலி மூலம் ரிமோட் பட்டனை அழுத்தி திட்டப்பணிகளை துவக்கி வைத்தார். மத்திய சாலைப் போக்குவரத்து மற்றும் நெடுஞ் சாலைத் துறை அமைச்சர் நிதின் கட்கரி, பிகானீர் நாடாளுமன்ற உறுப்பினரும் மத்திய சட்டம் மற்றும் நாடாளுமன்ற விவகாரங்களுக்கான இணை அமைச்சர் அர்ஜுன் ராம் மேக்வால் ஆகியோரும் நிகழ்ச்சியில் கலந்து கொண்டனர்

## மகளிர் உரிமை தொகை பெற பல்வேறு நிபந்தனைகள் விதிப்பதா? ஓ.பன்னீர்செல்வம் கண்டனம்



சென்னை: முன்னாள் முதலமைச்சர் ஓ.பன்னீர்செல்வம் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது: மகளிர் உரிமைத் தொகை பெற தி.மு.க. அரசு விதித்து உள்ள நிபந்தனைகளைப் பார்க்கும்போது, பெரும்பாலானோர் இந்தத் திட்டத்தின்கீழ் பயன் பெற முடியாது என்பது மட்டும் தெளிவாகிறது. மத்திய, மாநில அரசு ஊழியர்கள், ஆசிரியர்கள், பொதுத் துறை நிறுவனங்களில் பணிபுரிவோர், ஓய்வூதியதாரர்கள், தொழில் வரி செலுத்துவோர், வருமான வரிக் கணக்கு தாக்கல் செய்வோர், சமூகப் பாதுகாப்புத் திட்டங்களின்கீழ் பயன்பெறுவோர் என கணக்கெடுத்தாலே 2 கோடி குடும்பங்களைத்தொடும் நிலையில், பயனாளிகள் யார் என்பதே புரியாத புதிராக உள்ளது. மகளிர் உரிமைத் தொகையை யாருமே பெறக்கூடாது என்ற எண்ணத்தின் அடிப்படையில் நிபந்தனைகள் விதிக்கப்படுகிறதோ என்ற எண்ணம் மக்கள் மத்தியில் எழுந்து உள்ளது. ரேஷன் அட்டை, ஆதார் அட்டை போன்றவை இல்லை என்றாலும், அவர்களுக்கு உதவித் தொகை வழங்கப்படும் என்று குறிப்பிடப்பட்டு இருக்கிறது. இந்த விதியின்மூலம், சில லட்சம் தி.மு.க.வினருக்கு மட்டும் மகளிர் உரிமைத் தொகையை அளித்துவிட்டு, இந்த வாக்குறுதி நிறைவேற்றப்பட்டு விட்டது என்று மார்தட்டிக் கொள்ள தி.மு.க. அரசு முயலுகிறதோ என்ற சந்தேகம் மக்கள் மத்தியில் எழுந்து உள்ளது. இந்தத் திட்டத்தின்கீழ் கிட்டத்தட்ட ஒரு கோடி மகளிர் பயன் பெறுவர் என முதலமைச்சர் தெரிவித்திருந்த நிலையில், தற்போது விதிக்கப்பட்டுள்ள நிபந்தனைகளைப் பார்த்தால், ஒரு சில லட்சம் மகளிர்கூட இத்திட்டத் தின்கீழ் பயன் பெற முடியாத நிலை ஏற்பட்டு உள்ளது. நகைக்கடன் போல இதுவும் ஒரு ஏமாற்று வேலை என்பதை மகளிர் புரிந்து கொண்டு விட்டார்கள். இது வாக்களித்த மக்களை வஞ்சிக்கும் செயலாகும். தேர்தல் வாக்குறுதியில் மகளிர் உரிமைத் தொகை என்று அறிவித்ததற்கு ஏற்ப, அனைத்து குடும்ப அட்டை தாரர்களுக்கும் மகளிர் உரிமைத் தொகை வழங்கப்பட வேண்டு மென்பதே மகளிரின் எதிர்பார்ப்பாக இருக்கிறது. இவ்வாறு அவர் கூறி உள்ளார்

## ரஷியாவுடன் போர் உக்ரைனுக்கு கொத்துகுண்டுகளை வழங்க அமெரிக்கா முடிவு



வாஷிங்டன்: உக்ரைன் மீது ரஷியா தொடங்கிய போர் 500 வது நாளை தொட்டது. ரஷிய படைகள் தொடர்ந்து தாக்குதலை நடத்தி வருகிறது. உக்ரைனுக்கு ஆதரவாக உள்ள அமெரிக்கா மற்றும் மேற்கத்திய நாடுகள் ஆயுத உதவிகளை வழங்கி வருகின்றன. இதனால் ரஷிய படைக்கு எதிராக உக்ரைன் ராணுவம் கடும் சவால் அளித்து வருகிறது. இருந்த போதிலும் உக்ரைனின் சில நகரங்களை ரஷியா கைப்பற்றியது. உக்ரைனுக்கு அமெரிக்கா, ஏவுகணைகளை அழிக்கும் அமைப்பு ராக்கெட் உள்ளிட்ட ஏராளமான ஆயுதங்களை வழங்கி உள்ளது. இதற்கிடையே கிளஸ்டர் எனப்படும் கொத்துகுண்டுகளை வழங்குமாறு அமெரிக்க அதிபர் ஜோபைடனிடம் உக்ரைன் அதிபர் ஜெலன்ஸ்கி வலியுறுத்தினார். இந்த நிலையில் மிக ஆபத்தான கிளஸ்டர் குண்டுகளை உக்ரைனுக்கு வழங்க அமெரிக்கா முடிவு செய்து உள்ளது. இதுகுறித்து அமெரிக்க தேசிய பாதுகாப்பு ஆலோசகர் ஜேக் சல்லிவன் கூறும் போது, 'கொத்து குண்டுகளின் ஆபத்து காரணமாகவே உக்ரைனுக்கு அவற்றை அளிப்பது தாமதப்படுத்தப்பட்டது. ஆனால் உக்ரைனில் ஆயுத பற்றாக்குறை நிலவ அமெரிக்கா ஒருபோதும் விரும்பாது. உக்ரைனுக்கு அனுப்பப்படும் அமெரிக்க கொத்து குண்டுகள், ரஷியாவால் போரில் பயன்படுத்தப்பட்ட குண்டுகளைவிட மிகவும் பாதுகாப்பானவை' என்றார். கொத்து குண்டு என்பது ஒரு பெரிய குண்டுக்குள் பல சிறிய குண்டுகள் இருக்கும். ஏவுகணை, பீரங்கி அல்லது விமானத்தில் இருந்து அந்த குண்டு வீசப்படும். அந்த பெரிய குண்டு இலக்கில் வெடித்த பின் அதில் இருந்து பல சிறிய குண்டுகள் வெடித்து சிதறும். இது ஒரே இலக்கின் பரந்த பகுதியை தாக்கும் தன்மை உடையவை. இதனால் மோசமான பாதிப்பு, உயிரிழப்புகள் ஏற்படும். கொத்து குண்டுகள் 120க்கும் மேற்பட்ட நாடுகளில் தடை செய்யப்பட்டுள்ளன. இதுபோன்ற ஆயுதங்கள் பயன்படுத்துவது முற்றிலும் தடை செய்ய வேண்டும் என்ற ஐ.நா. உடன்படிக்கையில் 100 நாடுகள் கையொப்பமிட்டுள்ளன. ஆனால் சில சந்தர்ப்பங்களில் இதுபோன்ற குண்டுகளை பயன்படுத்த வேண்டிய கட்டாயம் இருப்பதாக கூறி அமெரிக்கா, ரஷியா உள்ளிட்ட சில நாடுகள் கையெழுத்திடவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. இதுதொடர்பாக ரஷிய வெளியுறவு அமைச்சக செய்தித் தொடர்பாளர் மரியா ஜாக ரோவா கூறும் போது, 'உக்ரைனுக்கு கிளஸ்டர் வெடி குண்டுகளை வழங்கும் அமெரிக்கர்களின் முடிவு விரக்தியின் செயல். இது உக்ரைனில் எதிர்தாக்குதலில் ஏற்பட்ட தோல்வியையும் பலவீனத்தையும் காட்டுகிறது' என்றார்

## முதலமைச்சர் மு.க.ஸ்டாலினுக்கு தோல்வி பயம் வந்து விட்டது அண்ணாமலை



சென்னை: தமிழக பா.ஜனதா தலைவர் அண்ணாமலை நிருபர்களிடம் கூறியதாவது: 2014 ம் ஆண்டு பா.ஜனதா அளிக்காத வாக்குறுதிகளை அளித்ததாக முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் பேசி வருகிறார். ஊழல்வாதிகள் வெளிநாடுகளில் பணத்தை பதுக்கி வைத்து இருப்பதாக பிரதமர் மோடி தெரிவித்தார். ஊழல்வாதிகளின் பணத்தை பொதுமக்களின் வங்கிக்கணக்கில் செலுத்துவோம் என்று பிரதமர் மோடி கூறவில்லை. 11 கோடி விவசாயிகளின் வங்கிக்கணக்கில் ஆண்டுக்கு ரூ.6 ஆயிரம் பணத்தை மத்திய அரசு செலுத்துகிறது. தமிழக முதலமைச்சர் மு.க.ஸ்டாலினுக்கு தோல்வி பயம் வந்து விட்டது. இவ்வாறு அவர் கூறினார்

## ஆளுநர் மட்டுமல்ல... நாட்டில் உள்ள அனைவரும் அரசியல் பேச வேண்டும் சீமான்



காரைக்குடி: காரைக்குடியில் நாம் தமிழர் கட்சியின் தலைமை ஒருங்கிணைப்பாளர் சீமான் செய்தியாளர்களை சந்தித்தார். அப்போது அவர் கூறியதாவது: வரும் பாராளுமன்ற தேர்தலில் நாம் தமிழர் கட்சி தனித்து போட்டியிடும். வரும் காலங்களில் திராவிட கட்சிகள் தவிர மற்ற கட்சிகள் வந்தால் கூட்டணி குறித்து பேசலாம். மீனவர்கள் கைது குறித்து அண்ணாமலையிடம் தான் கேட்க வேண்டும். ஆளுநர் மட்டுமல்ல, இந்த நாட்டில் உள்ள அனைவரும் அரசியல் பேச வேண்டும். அண்ணாமலை பேச வேண்டியதெல்லாம் ஆளுநர் பேசி விடுவதால் அண்ணாமலைக்கு குழப்பம். மக்களால் தேர்வு செய்யப்பட்ட ராகுல் காந்தியை தகுதி நீக்கம் செய்ய நீங்கள் யார்? ராகுல் காந்தியை தகுதி நீக்கம் செய்தது மக்களாட்சிக்கு விரோதமானது. விஜய் அரசியலுக்கு வந்துவிடுவாரோ என்று சிலருக்கு பயம். இதற்கு முன்பாக மது குடிக்கும் காட்சிகளில் விஜய் நடித்தது இல்லையா? இவ்வாறு அவர் கூறினார்



கோயம்புத்தூர் மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகத்தில் இன்று (09.07.2023) மாண்புமிகு வீட்டு வசதி மற்றும் நகர்புற வளர்ச்சித் துறை அமைச்சர் திரு.சு.முத்துசாமி அவர்கள் அனைத்து துறை அலுவலர்களுடன் வளர்ச்சித் திட்ட பணிகள் குறித்து ஆய்வு மேற்கொண்டார். அருகில் மாவட்ட ஆட்சித் தலைவர் திரு.கிராந்திகுமார் பாடி இ.ஆ.ப., நாடாளுமன்ற உறுப்பினர் திரு.கு.சண்முகசுந்தரம், மாண்புமிகு மாநகராட்சி மேயர் திருமதி.கல்பனா ஆனந்தகுமார், மாநகராட்சி ஆணையாளர் திரு.மு.பிரதாப் இ.ஆ.ப., மாவட்ட வருவாய் அலுவலர் திருமதி.ஷர்மிளா, துணை மேயர் திரு.இரா.வெற்றிசெல்வன் ஆகியோர் உள்ளனர்.



தமிழ்நாட்டில் உள்ள 38 மாவட்டங்களில் விரைவில் தொடங்கப்படவுள்ள "நடப்போம் நலம் பெறுவோம்" (Health Walk) திட்டத்தின் கீழ் தருமபுரி குடிநீர் வடிகால் வாரிய அலுவலக வளாகம், மாவட்ட ஆட்சியர் குடியிருப்பு பகுதி, தருமபுரி சிப்காட் அமையவுள்ள பகுதிகளில் இன்று (09.07.2023) மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வு துறை அமைச்சர் திரு.மா.சுப்பிரமணியன் அவர்கள் 8 கிலோ மீட்டர் தூரம் நடைபயிற்சி மேற்கொள்வதற்கான நடைபாதையை தேர்வு செய்து உறுதி படுத்துவதற்கான ஆய்வு மேற்கொண்டார்கள். உடன் மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.கி.சாந்தி இஆப., தருமபுரி சட்டமன்ற உறுப்பினர் திரு.எஸ்.பி.வெங்கடேஷ்வரன், மாவட்ட காவல் கண்காணிப்பாளர் திரு.ஸ்டீபன் ஜேசுபாதம், மாவட்ட வருவாய் அலுவலர் திருமதி.சு.அனிதா, முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் திரு. தடங்கம் பெ.சுப்பிரமணி ஆகியோர் உள்ளனர்.

# அப்துல்லா புரத்தில் கலைஞர் நூற்றாண்டு விழா பொது கூட்டம்

வேலூர் ஜூலை 10 வேலூர் மாவட்டம் அணைகட்டு சட்டமன்ற தொகுதி வேலூர் ஒன்றியம் திமுக சார்பில் அப்துல்லாபுரம் ஊராட்சி கிராமத்தில் மாவட்ட ஆதிதிராவிடர் நல குழு அமைப்பாளர் திவாகர்தலைமையிலும் ஊராட்சி செயலாளர் விமல்குமார் வரவேற்பில் முத்தமிழ் அறிஞர் டாக்டர் கலைஞர் நூற்றாண்டு விழா முன்னிட்டு பொது கூட்டம் நேற்று நடைபெற்றது. இதில் சிறப்பு அழைப்பாளராக வேலூர் மாவட்ட செயலாளர் ஏ.பி.நந்தகுமார் அணைகட்டு சட்டமன்ற உறுப்பினர் அவர்களும்



கழக பேச்சாளர் பொன்னேரி சிவா கலந்து கொண்டு சிறப்புரையாற்றினார்கள். இந்தநிகழ்ச்சியில்வேலூர் ஒன்றிய செயலாளர் சி.லி.ஞானசேகரன் மாவட்ட ஊராட்சி குழு பெருந்தலைவர் மு பாபு,மாவட்ட கவுன்சிலர் தா.பாபு ஒன்றிய செயலாளர்.கஜேந்திரன் துணை செயலாளர்கள் வி.காசி,வி.அம்பிகா மல்லான்,பொருளாளர் W.கோ.ராமலிங்கம் மற்றும் கழக நிர்வாகிகள் கழக தோழர்கள் பொது மக்கள் கலந்து கொண்டனர்

# திருவள்ளூர் அருகே தாய் திட்டியதால் 11 ஆம் வகுப்பு மாணவர் சாவு

திருவள்ளூர் ஜூலை 10 : திருவள்ளூரில் படிக்கவில்லை எனக்கூறி தாய் அறிவுறுத்தியதால் ஆத்திரம் அடைந்த 11 ஆம் வகுப்பு மாணவர் மின்விசிறியில் தூக்கிட்டு தற்கொலை செய்து கொண்ட சம்பவம் தொடர்பாக போலீசார் விசாரித்து வருகின்றனர். திருவள்ளூர் நகராட்சியில் வண்டிக்காரர் தெருவைச் சேர்ந்த தாமோதரன், திலகவதி தம்பதியரின் மகன் பிரகாஷ் ராஜ்(16). இவர்களது மகன்



இங்குள்ள தனியார் பள்ளியில் பதினோராம் வகுப்பு படித்து வந்தாராம். இந்த நிலையில் படிப்பில் கவனம் செலுத்தவில்லை எனக்கூறி தாயார் அறிவுறுத்தினாராம். இதனால் ஆத்திரம் அடைந்த பிரகாஷ் ராஜ் வீட்டில் யாரும் இல்லாத நேரத்தில் வெள்ளிக்கிழமை காலையில் மின்விசிறியில் புடவையால் தூக்கிட்டு தற்கொலை செய்து கொண்டாராம். இது தொடர்பாக திருவள்ளூர் நகர காவல் நிலைய போலீசார் விசாரித்து வருகின்றனர்



தருமபுரி மாவட்டம், அரூர் அரசு மருத்துவமனையில் நடைபெற்ற முடிவுற்ற திட்டப்பணிகள் திறப்பு விழாவில் மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் திரு.மா.சுப்பிரமணியன் அவர்கள் இன்று (09.07.2023) பயனாளிகளுக்கு அரசு நலத்திட்ட உதவிகளை வழங்கினார்கள். உடன் மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.கி.சாந்தி இஆப., மருத்துவம் மற்றும் ஊரக நலப்பணிகள் கூடுதல் இயக்குனர் மரு.இளங்கோ மகேஸ்வரன், முன்னாள் அமைச்சர் திரு.பி.பழனியப்பன், முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் திரு. தடங்கம் பெ.சுப்பிரமணி, மருத்துவம் மற்றும் ஊரக நலப்பணிகள் இணை இயக்குநர் மரு.ம.சாந்தி, துணை இயக்குநர் சுகாதார பணிகள் மரு.ஆர்.கே.ஜெயந்தி உட்பட தொடர்புடைய அலுவலர்கள் மற்றும் உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் உள்ளனர்.

# அறிவியலும் ஆன்மீக சிந்தனையும் ஒருங்கிணைந்த அனாதி அறக்கட்டளையின் 8வது ஆண்டு விழா

பழனி ஐவர்மலையில் உள்ள அனாதி அறக்கட்டளையின் 8வது ஆண்டு விழாவும், குரு பௌர்ணமியை முன்னிட்டும் பல்வேறு அறிஞர்கள், நிபுணர்கள், மருத்துவர்கள், ஆய்வாளர்கள் மற்றும் ஆசிரியர்கள் இணைந்து பல்வேறு நிகழ்சிகளை வழங்கினார். குழந்தைகளுக்காக இந்திய பாரம்பரிய விஞ்ஞானத்தை எடுத்துக்காட்டிய அறிவியல் கண்காட்சியை வழங்கினர். இதில் ஐந்து முதல் பதினோராம் வகுப்புவரை பயிலும் 1200க்கும் மேற்பட்ட குழந்தைகளும் 250 ஆசிரியர்களும் பங்கேற்று பயனடைந்தனர். இதில் தலைமை விருந்தினராக வந்திருந்த ஐ.ஐ.டி இயக்குனர் பேராசிரியர். காமகோடி அவர்கள் கூறியதாவது "தேசிய கல்விக் கொள்கை 2020 (ழிணிறி 2020) தொன்மையான பாரதிய விஞ்ஞானத்தை தற்போதைய பாடத்திட்டத்தில் அறிமுகப்படுத்த முக்கியத்துவம் தந்திருக்கிறது. ஐ.ஐ.டிகளிலும் பல்வேறு பாரம்பரிய விஞ்ஞான ஆய்வு மையங்கள் நிறுவப்பட்டுள்ளன. ஆதலால்,நமதுதேசத்தின் பன்னெடுங்கால அறிவியல்



வளர்ச்சியைப் பற்றி மாணவர்களால்அறிந்து கொள்ள வழிவகுத்த அனாதி அறக்கட்டளையின் கண்காட்சி மிகவும் பாராட்டக்கூடியது." இந்தக் கண்காட்சியில் கணிதம், வானியல், ஆயுர் வேதம், கட்டிடக்கலை, மொழியியல், மரபு வேளாண்மை, மாற்று எரிவாயு உற்பத்தி, உயிர்வாயு உற்பத்திக்கான ஆலை, சூழலியல் போன்ற பல்வேறு சுவாரசியமான செய்முறை விளக்கங்கள் 15 ஸ்டால்களில் வழங்கப்பட்டன. அனாதி அறக்கட்டளையின் நிறுவனர் மற்றும் குருமாதா திருமதி. ஸ்ம்ரிதி ரேகா அவர்கள் பேசிய பொழுது "இந்திய பாரம்பரிய விஞ்ஞானத்தைச் சார்ந்த பாடத்திட்டங்களை குழந்தைகளுக்கும் ஆசிரியர்களுக்கும் பயிற்சி முகாம்களின் வாயிலாக கடந்த பல ஆண்டுகளாக வழங்கி வருகிறோம். அதிவேகமாக கணக்கிடுதல், இயற்கையோடு ஒன்றி வாழ்தல், மூலிகைகள் பற்றிய சிறப்புகள், கணிதம், வானியல் முதலிய பாடங்களைத் தொன்மையான நூல்களிலிருந்து தொகுத்து வழங்கும் பொழுது குழந்தைகள் மிகவும் ஆர்வத்துடன் பயில்கின்றனர்" என்று குறிப்பிட்டார். அனாதி அறக்கட்டளையின் எட்டாம் ஆண்டு விழாவின் அம்சமான இந்த கண்காட்சி கிராமபுறங்களில் பயிலும் மாணவர்கள் பயனடையும் படி 4 வருடங்களாக நடித்தி வருவதை, முதன்மைச் செயல் அலுவலர் திருமதி. கோமதி மகிழ்ச்சியுடன் பகிர்ந்தார். இதில் சிறப்பு விருந்தினராக கிஜ்ஜீறீமீ நிறுவனத்திலிருந்து வந்த திரு. வித்யாஷங்கர் மாணவர்களின் அறிவியல் சிந்தனைகளை பாராட்டி ஊக்குவித்தார். இதை தொடர்ந்து ஆன்மீக சொற்பொழிவுகளும் அனாதி அறக்கட்டளையின் குருமார்களான சித்த யோகி ஆதிநாராயணன் மற்றும் குருமாதா ஸ்ம்ரிதி ரேகா குரு பௌர்ணமியின் மகிமை பற்றியும், நமது கலாச்சாரத்தில் குருமார்களுக்கு கொடுக்கும் முக்கியத்துவத்தையும் போதித்தனர். அவர்கள் குருமார்கள் மட்டும் அல்லாது பேராசிரியர்களாகவும் இருப்பவர்கள். ஆதலால் நம்பாரம்பரியமுறைகளில் உள்ள விஞ்ஞானத்தை எடுத்துக்காட்டும் வகைலயில் பல்வேறு தொகுப்புகளையும், நிகழ்ச்சிகளையும் வழங்கினார். சுவாமி கீதாமிருதானந்த சரஸ்வதி அவர்கள் பகவத் கீதையின் மகிமையை எடுத்து விளக்கினார். திரு. கிருஷ்ண ஜகன்நாதன்ஜி அவர்கள் பாரதத்தின் தொன்மையான கல்வி முறை பற்றியும், பாரதியாரின் கல்வி பற்றிய தீர்க பார்வை பற்றியும், குருகுலங்களின் மகத்துவம் பற்றியும் கரதோஷங்கள் எழ எடுத்துரைத்தார். ஒருங்கிணைந்த ஆரோக்கியம் மற்றும் நல்வாழ்வு குறித்த நிபுணர்களின் கலந்துரையாடல் பல்வேறு சித்த ஆயுர்வேத மருத்துவர்களால் நடத்தப்பட்டது. சிறுதானியம் மற்றும் நீர் பராமரிப்பு பற்றிய கலந்தாய்வும் நடந்தது. இதை தொடர்ந்து அனாதி அறக்கட்டளையின் பல்வேறு கல்விச்சேவையின் இன்னொரு பரிமாணமாக கிராமிய Artificial Intelligence கல்வி மையம் (Rural AI சென்டர்) தொடங்கப்பட்டது. Artificial intelligence என்பது கணினி அறிவியலின் வளர்ச்சியினை நிர்ணயிக்கும் உச்ச நிலையாகும், அதாவது தொழில்நுட்பமான இயந்திரங்களை உருவாக்கி அதை மனிதர்களைப்போல தானாக செயல்பட வைக்கும் ஒரு நுணுக்கமான தொழில்நுட்பத்தை செயற்கை நுண்ணறிவு எனக்கூறப்படுகிறது. இதை கிராம புறங்களில் உள்ள இளைஞர்கள் உயர் தர கல்வி சேவையாக இந்த மய்யம் வழங்குகிறது.

# பாண்டூர் இந்திரா மருத்துவ கல்லூரி வளாகத்தில் "நான் முதல்வன் உயர்வுக்கு படி" என்ற உயர் கல்வி வழிகாட்டல் முகாம் : மாவட்ட ஆட்சியர் ஆல்பி ஜான் வர்கீஸ் துவக்கி வைத்தார்

திருவள்ளூர் ஜூலை 10 : திருவள்ளூர் மாவட்டம், பாண்டூர், இந்திரா மருத்துவ கல்லூரி வளாகத்தில் இடைநின்ற மாணவர்கள் உயர்கல்வி தொடர்வதை ஊக்குவிக்கும் வகையில் நடைபெற்ற "நான் முதல்வன் உயர்வுக்கு படி" என்ற உயர்கல்வி வழிகாட்டல் முகாமை மாவட்ட ஆட்சியர் ஆல்பி ஜான் வர்கீஸ் துவக்கி வைத்து பேசினார். நான் முதல்வன் உயர்வுக்கு படி என்ற உயர் கல்வி வழிகாட்டல் முகாம் மூலமாக இடைநின்ற மாணவர்களுக்கு வழிகாட்டும் திட்டமானது தமிழ்நாடு முதலமைச்சர் அறிவுறுத்தலின்படி, 12 ஆம் வகுப்பு படித்த பின்னர் வேறு எந்த உயர்கல்விக்கும் விண்ணப்பிக்காத மாணவர்களை அடையாளம் கண்டு அவர்கள் எந்தெந்த காரணங்களால் உயர்கல்விக்கு செல்ல முடியாமல் உள்ளனர் என்பதையும் கண்டறிந்து



அதற்கு எந்த வகையில் தீர்வுவளிக்க முடியும் என்ற ஆலோசனையின் அடிப்படையில் தான் "நான் முதல்வன் உயர்வுக்கு படி" என்ற ஊர் உன்னதமான திட்டம் தமிழ்நாடு அரசால் துவக்கி வைக்கப்பட்டுள்ளது. மேலும் வேறு எந்த மாநிலத்திலும் இல்லாத அளவில் உயர் கல்விக்கு செல்லும் மாணவியர்களுக்கு மாதம் தலா ரூபாய் ஆயிரம் வழங்கும் திட்டமும் நம் தமிழக அரசால் அறிமுகப்படுத்தப்பட்டு தற்பொழுது செயல்படுத்தப்பட்டு வருகிறது. நமது மாவட்டத்தை பொறுத்தவரையில் 1300 மாணவ மாணவியர்களை கண்டறிந்து பொன்னேரி திருவள்ளூர் மற்றும் திருத்தணி ஆகிய மூன்று குழுக்களாக வரவழைத்து அப்பகுதிகளில்இந்தநான் முதல்வன் உயர்வுக்கு படி முகாம்கள் மூலமாக அவர்களின் உயர் கல்விக்கு வழிகாட்டும் நிகழ்வு நடத்தப்படுகிறது. நமது திருவள்ளூர் மாவட்டம் மாநில அளவில் கூடுதலாக கல்வி கடன் வழங்கிய முதல் மூன்று மாவட்டங்களில் ஒன்றாக உள்ளது மிகவும் சிறப்புக்குரியது. குறிப்பாக கடந்த வருடத்தில் மட்டும் ரூ145 கோடி அளவிற்கு கல்வி கடன் நமது மாவட்டத்தில் வழங்கப்பட்டுள்ளது. இருப்பினும் இன்னும் கல்விக் கடன்கள் வழங்கப்பட வேண்டி உள்ளதால் அதற்காக மாவட்ட முன்னோடி வங்கியோடு மாவட்ட நிர்வாகமும் இணைந்து பல்வேறு கிராமங்களில் சிறப்பு முகாம்களும் நடத்தப்பட உள்ளது என மாவட்ட ஆட்சியர் தெரிவித்தார். முன்னதாக முகாமில் உயர்கல்வி வாய்ப்புகளை பெறாத மாணவர்களுக்கு பேருதவியாக பல்வேறு அரசு துறைகளின் சார்பில் விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில் அமைக்கப்பட்ட அரங்குகள் கலை, அறிவியல் கல்லூரிகள், பொறியியல் கல்லூரிகள் ஐடிஐ, திறன் மேம்பாட்டு மையங்கள் சார்பாக அமைக்கப்பட்ட அரங்குகள் மற்றும் முன்னோடி வங்கிகள் மூலம் மாணவர்கள் கல்வி கடன் உதவிகள் மற்றும் ஆலோசனை வழங்குவதற்காக அமைக்கப்பட்ட அரங்குகள் உள்ளிட்ட பல்வேறு அரங்குகளை மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் திறந்து வைத்து பார்வையிட்டார். அதனைத் தொடர்ந்து, மாணவ மாணவியர்களுக்கு வழிகாட்டி கையேடுகளை மாவட்ட ஆட்சியர் இலவசமாக வழங்கினார். இதில் திருவள்ளூர் சட்டமன்ற உறுப்பினர் வி.ஜி.ராஜேந்திரன், பூவிருந்தவல்லி சட்டமன்ற உறுப்பினர் ஆ.கிருஷ்ணசாமி, மாவட்ட முதன்மை கல்வி அலுவலர் கோ. சரஸ்வதி, திருவள்ளூர் வருவாய் கோட்டாட்சியர் ஜெயராஜ் பௌலின், இந்திரா கல்வி குழுமம் மேலாண்மை இயக்குநர் இந்திரா ராஜேந்திரன், மாவட்ட திறன் பயிற்சி அலுவலக உதவி இயக்குநர் ரவீந்திரன், மாவட்ட முன்னோடி வங்கி மேலாளர் அருள் ராஜா, மாணவ மாணவியர்கள், ஆசிரியர்கள், பெற்றோர்கள் மற்றும் பல்வேறு துறை அரசு அலுவலர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர்



திண்டுக்கல் மாவட்ட நாட்டு நலப்பணித் திட்டம் மற்றும் காவல்துறை சார்பாக ஒட்டன்சத்திரத்தில் நடைபெற்ற போதைப்பொருள் ஒழிப்பு விழிப்புணர்வு பயிற்சி முகாமில் நடைபெற்ற மனநலம் சம்மந்தமான வினாடி வினா போட்டியில் வெற்றி பெற்ற நாட்டு நலப்பணித் திட்ட மாணவ, மாணவிகளுக்கு ஒட்டன்சத்திரம் அரசு மருத்துவமனை முன்னாள் தலைமை மருத்துவர் டாக்டர்.ஏ.ஆசைத்தம்பி பரிசுகள் வழங்கினார். உடன் நாட்டு நலப்பணித்திட்ட மாவட்ட தொடர்பு அலுவலர் மு.சௌந்தரராஜ், கே.ஆர்.அரசு மாதிரி மேல்நிலைப்பள்ளி தலைமை ஆசிரியை இல.மணிமொழி, பழனி கல்வி மாவட்ட ஜூனியர் ரெட்டிகிராஸ் அமைப்பாளர் எஸ்.ரவிச்சந்திரன் மற்றும் பலர் உள்ளனர்.



மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் திரு.மா.சுப்பிரமணியன் அவர்கள் அரசு தருமபுரி மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் ரூ.75.00 இலட்சம் மதிப்பீட்டில் அமைக்கப்பட்டுள்ள ஒருங்கிணைந்த ஹீமோபிலியா மற்றும் ஹீமோகுளோபினோபதி பராமரிப்பு மையக் கட்டடத்தினை இன்று (09.07.2023) திறந்து வைத்தார்கள். உடன் மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.கி.சாந்தி இஆப., தருமபுரி சட்டமன்ற உறுப்பினர் திரு.எஸ்.பி.வெங்கடேஷ்வரன், தருமபுரி நகர்மன்ற தலைவர் திருமதி.மா.லட்சுமி, அரசு தருமபுரி மருத்துவக்கல்லூரி மருத்துவமனை முதல்வர் மரு. க.அமுதவல்லி, முன்னாள் அமைச்சர் திரு.பி.பழனியப்பன், முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் திரு. தடங்கம் பெ.சுப்பிரமணி, மருத்துவம் மற்றும் ஊரக நலப்பணிகள் இணை இயக்குநர் மரு.ம.சாந்தி, துணை இயக்குநர் சுகாதார பணிகள் மரு.ஆர்.கே.ஜெயந்தி, துணை முதல்வர் (பொ) மரு. டி.எ.சாந்தி உட்பட தொடர்புடைய அலுவலர்கள் உள்ளனர்.




சிவகங்கை நகரில் பிள்ளைவயல் காளியம்மன் கோவில் பூச்செரிதல் விழா நடைபெறவிருப்பதால் நகர் முழுவதும் நகராட்சி சார்பாக தூய்மை பணிகள் நடந்து வருகின்றது..அதனை தொடர்ந்து தற்போது காலை 11வது வார்டு மற்றும் சிவன் கோவில் சுற்றி உள்ள பகுதிகளில் நகராட்சி சார்பாக மாஸ் ஓர்க்பணிகள் நடைபெறுகின்றது..இப்பணிகளை நகர் மன்ற தலைவர் சீஎம்.துரைஆனந்த் ஆய்வு மேற்கொன்டார்..ஆய்வின் போது நகர் மன்ற துணை தலைவர் கார்கண்ணன்..நகர் மன்ற உறுப்பினர்கள் NM.ராஜா,ஜெயகாந்தன்,SO,SI ஆகியோர் உடனிருந்தனர்...



வேலூர் மாவட்டம் காட்பாடி வட்டத்தில் உள்ள இரட்டை ஏறியான தாரப்படவேடு ஏரி மற்றும் கழிஞ்சூர் ஏறியினை புனரமைக்கும் பணிகள் நடைபெற்று வருவதை நீர்வளத்துறை அமைச்சர் துரைமுருகன், நேற்று பார்வையிட்டு ஆய்வு செய்தார். இந்த ஆய்வின் போது மாவட்ட ஆட்சியர் குமரவேல் பாண்டியன், அணைக்கட்டு சட்டமன்ற உறுப்பினர் ஏ.பி நந்தகுமார், மாநகராட்சி மேயர் திருமதி சுஜாதா, துணை மேயர் சுனில் குமார், மாவட்ட வருவாய் அலுவலர் ராமமூர்த்தி, 1வது மண்டல குழு தலைவர் புஷ்பலதா வன்னியராஜா, உள்பட பலர் கலந்து கொண்டனர்.



சேலம் மாநகர காவலர் சமுதாயக் கூடத்தில் காவல் ஆணையாளர் திருமதி.பா.விஜயகுமாரி இ.கா.ப., அவர்கள் தலைமையில் சேலம் மாநகரத்தில் காணாமல் போனவர்கள் மற்றும் அடையாளம் தெரியாத பிரேதம் குறித்து பதிவு செய்யப்பட்ட வழக்குகளை கண்டறிய சிறப்பு முகாம் நடைபெற்றது. இந்த முகாமில் சேலம் மாநகர காவல் துணை ஆணையாளர் (தெற்கு) திருமதி.ஷி.றி.லாவண்யா அவர்களும், காவல் உதவி ஆணையாளர்கள், காவல் ஆய்வாளர்கள் மற்றும் காவல் உதவி ஆய்வாளர்கள் ஆகியோர்கள் கலந்து கொண்டனர். இந்த முகாம் மூலம் காணாமல் போன 16 நபர்கள் கண்டுபிடிக்கப்பட்டார்கள்.



தருமபுரி மாவட்டம், கம்பைநல்லூர் அரசு ஆரம்ப சுகாதார நிலையத்தில் மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் திரு.மா.சுப்பிரமணியன் அவர்கள் இன்று (09.07.2023) திடீர் ஆய்வு மேற்கொண்டு மேற்கொள்ளப்பட்டு வரும் சிகிச்சை முறைகள் குறித்து பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்கள்.

# செந்துறை சமத்துவபுரம் அருகே இருசக்கர வாகனத்தில் சென்ற பெண் நிலைதடுமாறி விழுந்ததில் உயிரிழப்பு



அரியலூர் மாவட்டம் செந்துறை சமத்துவப்புரத்தை சேரந்தவர் கண்ணன் இவரது மனைவி கோமதி இன்று ஜூலை 8 ந் தேதி இருசக்கர வாகனத்தில் செந்துறை நோக்கி வந்துகொண்டிருந்த போது எதிர்பாராத விதமாக கோமதியின் சேலை இருசக்கர வாகனத்தில் மாட்டிக்கொண்டதில் நிலைதடுமாறி விழுந்து காயமடைந்தார். அருகில் இருந்தவர்கள் மற்றும் அவரது குடும்பத்தினர் அவரை மீட்டு மருத்துவமனை கொண்டு சென்றபோது அவரை பரிசோதித்ததில் கோமதி ஏற்கனவே இறந்துவிட்டதை தெரிவித்தனர் இது குறித்து தகவலறிந்த செந்துறை காவல்துறையினர் உயிரிழந்தவரின் உடலை உடற்கூராய்வுக்கு அனுப்பியதோடு இவ்விபத்து குறித்து வழக்கு பதிவு செய்து விசாரணை மேற்கொண்டு வருகின்றனர். கோமதியின் திடீர் மரணம் செந்துறை சமத்துவபுரம் மக்களிடையே சோகத்தை ஏற்படுத்தியுள்ளது

# திருவண்ணாமலை முன் சிட்டி ரோட்டரி டயாலிசிஸ் சென்டர் முதலமைச்சர் மருத்துவ காப்பீட்டு மூலம் இலவச சேவை




திருவண்ணாமலை மூன் சிட்டி ரோட்டரி சங்கம் நடத்தி வரும் ரோட்டரி டயாலிசிஸ் மையத்தினை முதலமைச்சரின் மருத்துவ காப்பீடு திட்டத்தின் மூலம் இணைக்கப்பட்டதன் அறிமுக விழா மாண்புமிகு பொதுப்பணித்துறை மற்றும் நெடுஞ்சாலைகள் துறை அமைச்சர் எ.வ.வேலு அவர்கள் இவ்விழாவினை துவக்கி வைத்து பயனாளிகளுக்கு முதலமைச்சரின் மருத்துவ காப்பீட்டு அடையாள அட்டையை வழங்கி சிறப்புரையாற்றினார் இவ்விழாவில் துணை சபாநாயகர் கு.பிச்சாண்டி திருவண்ணாமலை நாடாளுமன்ற உறுப்பினர் சி என் அண்ணாதுரை, எ.வ. வே கம்பன் டாக்டர் அரவிந்தன் டாக்டர் பாபுஜி, நகர மன்ற தலைவர் நிர்மலா வேல்மாறன், எம் மன்னலிங்கம் G. புகழேந்தி P.அருண்மொழிவர்மன் APS. பழனி மற்றும் மூன் சிட்டி ரோட்டரி சங்க தலைவர் உறுப்பினர்கள் நிர்வாகிகள் கலந்து கொண்டு சிறப்பித்தனர்



மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் திரு.மா.சுப்பிரமணியன் அவர்கள் தருமபுரி மாவட்டம், அரூர் அரசு மருத்துவமனையில் கட்டப்பட்டுள்ள CT Scan மற்றும் C-arm உடன் எலும்பு முறிவு அறுவை சிகிச்சை மேசையினை இன்று (09.07.2023) குத்து விளக்கேற்றி திறந்து வைத்து, பார்வையிட்டார்கள். உடன் மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.கி.சாந்தி இஆப., மருத்துவம் மற்றும் ஊரக நலப்பணிகள் கூடுதல் இயக்குனர் மரு.இளங்கோ மகேஸ்வரன், முன்னாள் அமைச்சர் திரு.பி.பழனியப்பன், முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் திரு. தடங்கம் பெ.சுப்பிரமணி, மருத்துவம் மற்றும் ஊரக நலப்பணிகள் இணை இயக்குநர் மரு.ம.சாந்தி, துணை இயக்குநர் சுகாதார பணிகள் மரு.ஆர்.கே.ஜெயந்தி உட்பட தொடர்புடைய அலுவலர்கள் மற்றும் உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் உள்ளனர்.

# ஒட்டன்சத்திரத்தில் நாம் தழிழர் கட்சியின் சார்பாக தாயே பூமி தாயே என்ற தலைப்பில் மாபெரும் பொதுக்கூட்டம் தலைமை ஒருங்கிணைப்பாளர் செந்தமிழன் சீமான் எழுச்சியுரையாற்றினார்




ஒட்டன்சத்திரம் ஜூலை திண்டுக்கல் மாவட்டம், ஒட்டன்சத்திரம் நகரத்தில் நாம் தழிழர் கட்சியின் சார்பாக தாயே பூமி தாயே என்ற தலைப்பில் மாபெரும் பொதுக்கூட்டம் கட்சியின் தலைமை ஒருங்கிணைப்பாளர் சீமான் தலைமையில் நடைபெற்றது. இப்பொதுக்கூட்டம் ஒட்டன்சத்திரம் தொகுதில் உள்ள நாம் தமிழர் கட்சியை சார்ந்த நகர, ஒன்றிய பொருப்பாளர்கள், கிராம கிளை பொறுப்பாளர்கள் அனைவரும் இணைந்து எழுச்சிமிகு பொதுக்கூட்டத்தை நடத்தினர். இதில் மாநில கொள்கை பரப்பு செயலாளர் சாட்டை துரைமுருகன், மாநில மகளிர் பாசறை கயழ்விழி, மாநில மாணவர் பாசறை இடும்பவணம் கார்த்திக், மாநில ஒருங்கிணைப்பாளர் ஹிமாயுன் கமீர், இந்நிகழ்ச்சிக்கு தொகுப்பாளராக முனைவர் நத்தம் சிவசங்கர் ஆகியோர் கலந்துகொண்டனர். எழுச்சியுரையில் சீமான் பேசியதாவது: எங்களுடைய முப்பாட்டன் தேவர் திருமகனார் முத்துராமலிங்கத்தேவர் அவர்கள் எங்களுக்கு போதித்தது நீ உண்மையை பேசு, அதை உறக்க பேசு, இறுதிவரை பேசு, அதை முழுமையாக பேசினால்தான் நீ வீரனென்று கற்ப்பித்தார். அந்த தத்துவ வார்த்தைகளை ஏற்று வழி நடக்கின்ற பிள்ளைகள் நாங்கள், சத்தியத்தை பேசுவோம் அதை சத்தமாக பேசுவோம் தாயே பூமி தாயே என்று ஏன் பேசுகின்றோம் மனித இனத்தை பெற்றவள் தாய் ஆனால் பூமியில் உள்ள அனைத்து உயிர்களையும் பெற்றவள் நம் பூமி தாய் மட்டுமே அது இல்லாமல் நம் வாழ்வில் எதையும் பெற முடியாது. இருக்கின்ற கோவில்கள், வீடுகள், வாகனங்கள், வான ஊர்தி, கப்பல், வீட்டு உபகரணங்கள் நாம் தினமும் உபயோகப்படுத்துகின்ற அனைத்தும் பூமி தாய் நமக்கு தந்து உதவுகிறது அதனால் தான் தாயே பூமி தாயே என்று பேசுகின்றேன். ஒரு மதத்திலிருந்து எந்த மதத்திற்கும் மாற்றிக்கொள்ளலாம் உலகில் வணங்குவதற்கு லட்சகணக்கான சாமிகள் ஆனால் நீ வாழ்வதற்கு ஒரே ஒரு பூமிதான் உள்ளது. சாமியை மாற்றிகொள்வது போல் பூமியை மாற்றிக்கொள்ள முடியாது இந்த பூமி உனக்கும் எனக்கும் சொந்தமல்ல பல லட்சக்கணக்கான உயிர்களுக்கும் சொந்தமானது இந்த பூமியில் உள்ள இயற்கை அன்னைக்கு எந்த உயிரினங்கலாலும் ஆபத்து இல்லை கடைசியாக வந்த மனிதனால் மட்டுமே இயற்கை அன்னைக்கு ஆபத்து நீ நல்ல காற்றை சுவாசிக்க வேண்டுமென்றால் இயற்கை அன்னையிடம் இருக்கின்ற மண்ணையும் மரங்களையும் அளிக்காதே என்றும் நீ ஒரு மரத்தை நட்டு வளர்த்தால் அதுதான் பூமி அன்னைக்கு நீ செலுத்துகின்ற நன்றி கடன். மேலும் பேசிய சீமான் அணை, குளம், குட்டை, கிணறு ஆகியவைகளை மனிதன் உருவாக்கினான் ஆனால் ஆற்றை உருவாக்கியது மலை அருவிஅது ஆறாய் ஒடிவந்தது அதில் நீர் வந்தது அதனால் நம் வாழ்வு உயர்ந்தது இது இயற்கையின் சுழர்ச்சி என்றும் கடந்த 25 ஆண்டுகளில் 30 அடி ஆற்று மணலை அள்ளி விற்று திண்றுவிட்டார்கள் அந்த மணல் அரை இன்ஞ் வருவதற்கு நூறு ஆண்டுகள் ஆகுமென்று சொல்லப்படுகிறது ஆற்றையும் மரத்தையும் உருவாக்க முடியும் ஆனால் மலையையும் மணலையும் உருவாக்க முடியாது அந்த ஆற்று மணலை விற்க யார் அனுமதி கொடுத்தது என்றும் மேற்கு தெடர்ச்சி மலையில் இருக்கின்ற பாறைகளை வெடி வைத்து உடைத்து எப்படி விற்கப்படுகிறது. வெடி வைப்பதால் காற்று மாசுபாடு ஏற்படுகிறது. இதை எவ்வாறு தடுக்க முடியும் என்று கோடிட்டு காட்டி இதை நான் பேசுவது தேர்தல் ஓட்டுக்காக அல்ல உன் வாழ்வுக்காகவும் நம் நாட்டுக்காகவும் நாம் தமிழர் கட்சி என்றும் உங்களோடு இணைந்து நிற்கும் என்றார். இப்போதுக்கூட்டத்தில் ஏராளமான பொது மக்களும் தொண்டர்களும் கலந்துகொண்டனர்.



கடலூர் மாவட்டம் காவல் கண்காணிப்பாளர் அலுவலகத்தில் இன்று 7.7.2023 ஆம் தேதி காலை இறைவனடி சேர்ந்த மரியாதைக்குரிய கோவை சரக காவல்துறை துணை தலைவர் திரு. சி. விஜயகுமார் மிறிஷி அவர்களின் திருஉருவபடத்திற்கு கடலூர் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் திரு. இரா. இராஜாராம் அவர்கள் மலர் தூவி அஞ்சலி செலுத்தினார். தொடர்ந்து கூடுதல் காவல் கண்காணிப்பாளர்கள் திரு. அசோக்குமார், திரு. சீனிவாசலு, துணை காவல் கண்காணிப்பாளர்கள் திரு. விஜிகுமார், திரு. தேவராஜ், திரு. நாகராஜன், தனிப்பிரிவு காவல் ஆய்வாளர் திரு. செந்தில் விநாயகம் மற்றும் காவல் அதிகாரிகள், அமைச்சு பணியாளர்கள், காவலர்கள் அனைவரும் மலர் தூவி அஞ்சலி செலுத்தினார்கள். முன்னதாக மறைந்த காவல்துறை துணை தலைவர் அவர்களுக்கு இரண்டு நிமிடம் அஞ்சலி செலுத்தினார்கள். மறைந்த திரு. சி. விஜயகுமார் மிறிஷி அவர்கள் கடந்த 29.06.2015 தேதி முதல் 30.07.2018 தேதி வரை கடலூர் மாவட்ட காவல் கண்காணிப்பாளராக பணியாற்றியவர் என்பது குறிப்பிடத்தக்கது. இன்று கடலூரில் அனைத்து காவல் நிலையங்களிலும் மறைந்த காவல்துறை துணை தலைவர் அவர்களின் திருவுருவப்படத்திற்கு காவல் அதிகாரிகள், காவலர்கள் மலர் தூவி அஞ்சலி செலுத்தினார்கள்.

# கள்ளிமந்தயம் அருகே தும்பிச்சிபாளையத்தில் 5வது நாளாக காத்திருப்புப் போராட்டம் தமிழக விவசாயிகள் பாதுகாப்பு சங்கத்தின் சார்பாக நடைபெற்றது



ஒட்டன்சத்திரம் ஜூலை திண்டுக்கல் மாவட்டம் ஒட்டன்சத்திரம் தொகுதி கள்ளிமந்தியம் அருகே உள்ள தும்பிச்சிபாளையத்தில் தமிழக விவசாயிகள் பாதுகாப்பு சங்கத்தின் சார்பாக 5 ஆவது நாளாக விவசாயிகளின் 10 அம்ச கோரிக்கையை வலியுறுத்தி தொடர் காத்திருப்பு போராட்டம் நடைபெற்றது. மேலும் விவசாயிகள் பாலைக் கீழே ஊற்றி போராட்டம் நடத்தினர். இந்நிகழ்வில் சிறப்பு விருந்தினர் தமிழிக விவசாயிகள் பாதுகாப்பு சங்கம் நிறுவனர் வழக்கறிஞர் ஈசன்முருகசாமி போராட்ட ஒருங்கிணைப்பு வடிவேலு, மாவட்ட அமைப்பு செயலாளர் கோனேரிப்பட்டி பாலு, ஆகியோர் தலைமை வகித்தனர். இளங்கோ கௌதம் ஈஷ்வரன் செல்லமுத்து ஆகியோர் முன்னிலை வகித்தனர். எழுகாம் வலசு கண்வலிவிதை பிரச்சனை தொடர்பாகவும், மின் கோபுர பிரச்சினை, நல்லதங்காள் அணை தொடர்பாகவும் பாதிக்கப்பட்ட விவசாயிகள் என பலர் கலந்து கொண்டனர்.

# ஜெயங்கொண்டத்தில் கலைஞர் நூற்றாண்டு விழாவை முன்னிட்டு மாபெரும் பொதுக்கூட்டம் நடைபெற்றது



அரியலூர் மாவட்டம் ஜெயங்கொண்டம் சன்னதி தெருவில் முன்னாள் முதல்வர் கலைஞர் மு கருணாநிதி நூற்றாண்டு விழாவை முன்னிட்டு மாபெரும் பொதுக்கூட்டம் நகர செயலாளர் வெகொ கருணாநிதி தலைமையில் நடைபெற்றது. இந்த கூட்டத்திற்கு ஒன்றிய கழக செயலாளர்கள் தனசேகர் இரா மணிமாறன் ரெங்க முருகன் ஆர் கலியபெருமாள் பேரூர் கழக செயலாளர்கள் கோபாலகிருஷ்ணன் அல் போன்ஸ் ஆகியோர் முன்னிலை வைத்தனர். இதில் சிறப்பு விருந்தினராக மாண்புமிகு போக்குவரத்து துறை அமைச்சர் சா சி சிவசங்கர் கலந்து கொண்டு சிறப்புரையாற்றினார் ஜெயங்கொண்டம் சட்டமன்ற உறுப்பினர் க சொ க கண்ணன் சுபா சந்திரசேகர் ஆகியோர் வாழ்த்துரை வழங்கினர் மாண்புமிகு அமைச்சர் சா சி சிவசங்கர் மகளிருக்கு நலத்திட்டங்கள் வழங்கினார். இதில் தலைமை கழக செய்தி தொடர்பு இணைச் செயலாளர் தமிழன் பிரசன்னா கலந்து கொண்டு பேருரை ஆற்றினார். தலைமை செயற்குழு உறுப்பினர் எம்பிபாலசுப்பிரமணியன் மாவட்ட பொருளாளர் கு ராஜேந்திரன் மூ கணேசன் சி ஆர் எம் பொய்யாமொழி தெய்வ இளையராஜா உள்ளிட்ட மாநில மாவட்ட ஒன்றிய நகர பேரூர் கிளை நிர்வாகிகள் தொண்டர்கள் என பெரும் திரளாக கலந்து கொண்டனர். இந்நிகழ்ச்சியின் தொடக்கத்தில் மாவட்ட பிரதிநிதி எஸ். ராஜமாணிக்கம் வரவேற்புரை ஆற்றினார் நிகழ்ச்சியின் நிறைவாக 14 வது வட்டக் கழக செயலாளர் ஆ நடராஜன் நன்றியுரை வழங்கினார்.



தருமபுரி உழவர் சந்தையில் தோட்டக்கலைத்துறை மூலம் தக்காளி விற்பனையினை மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.கி.சாந்தி இஆப., அவர்கள் இன்று (09.07.2023) துவக்கி வைத்தார்கள்.

## எடப்பாடியார் தலைமையில் ஆகஸ்ட் 20 ஆம் தேதி மதுரையில் நடைபெறும் வீர வரலாற்றின் பொன்விழா எழுச்சி மாநாட்டில் குடும்பம்,குடும்பமாக பங்கேற்க வேண்டும்



மதுரை புறநகர் மேற்கு மாவட்ட கழகத்தின் சார்பில் சட்டமன்ற எதிர்க்கட்சித் துணைத் தலைவர் ஆர்.பி. உதயகுமார் தீர்மானம் நிறைவேற்றம் வருகின்ற ஆகஸ்ட் 20 ஆம் தேதி மதுரையில் எடப்பாடியாரின் தலைமையில் வீர வரலாற்றில் பொன்விழா எழுச்சி மாநாடு நடைபெறுகிறது. இதனை தொடர்ந்து வரும் ஞாயிற்றுக்கிழமை முகூர்த்தக்கால் அமைக்கும் பணி மற்றும் ஆலோசனை கூட்டம் மதுரை ரிங் ரோடு கருப்புசாமி கோவில் எதிரே உள்ள திடலில் நடை பெறுகிறது. இதனை தொடர்ந்து மதுரை புறநகர் மேற்கு மாவட்ட கழகத்தின் சார்பில், ஆலோசனைக் கூட்டம் டி.குன்னத்தூரில் உள்ள அம்மா கோவிலில் சட்டமன்ற எதிர்க்கட்சி துணை தலைவர் ஆர்.பி.உதயகுமார் தலைமையில் நடைபெற்றது. இதில் கீழ்க்கண்ட தீர்மானங்களை ஆர்.பி. உதயகுமார் நிறைவேற்றியதாவது இந்திய திருநாட்டில் அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தை, 50 ஆண்டுகால பொற்கால சரித்திரத்தில்16லட்சம் தொண்டர்கள் கொண்ட மாபெரும் இயக்கமாக புரட்சித்தலைவர் உருவாக்கினார். புரட்சித்தலைவருக்கு பிறகு இந்த இயக்கத்திற்கு வந்த சோதனைகள், வேதனைகளை தனதாக்கிகொண்டு, மீண்டும் புரட்சி தலைவரின் புனித ஆட்சியை தமிழகத்தில் மலர செய்து, கழகத்தில் ஒன்னரை கோடி தூய தொண்டர்களை நிலைநிறுத்தி, இந்தியாவிலேயே மூன்றாவது மாபெரும் இயக்கமாக கழகத்தை கழகத்தை அம்மா உருவாக்கினார். அம்மாவிற்கு பிறகு தாய் இல்லாத பிள்ளைகளால், தலைவன் இல்லாத தொண்டர்களாய் கழகம் தவித்த போது கலங்கரை விளக்கமாய், காலத்தின் கொடையாய், புரட்சித்தலைவர், புரட்சித்தலைவி அம்மா ஆகியோரின் மறு உருவமாய் எடப்பாடியார் கழகத்தையும், நாட்டு மக்களையும் நெருப்பாற்றில் நீந்தி காப்பாற்றியது மட்டுமல்லாது, இந்திய தேசமே பாராட்டு வகையில், மக்கள் போற்று மகத்தான ஆட்சியை நடத்தி காட்டினார். தாய் தமிழ்நாட்டை இந்திய அளவில் முதன்மை மாநிலமாக நிலை நிறுத்தி, கழகத்தின் எளிய தொண்டனும் மக்கள் சேவையாலும், உழைப்பாலும் உயர்ந்த இடத்திற்கு வரலாம் என்ற வரலாற்றை கழகத்தில் உருவாக்கித் தந்து, ஜனநாயகத்தை கட்டி காத்து, எல்லோரும் எல்லா வளமும் பெற வேண்டும் இங்கு இல்லாமல் இல்லாத நிலை வேண்டும் என்ற அம்மாவின் கனவை நனவாக்கினார். இந்த இயக்கம் இன்னும் நூறாண்டு காலம் அன்னை தமிழகத்தில் மக்கள் சேவை ஆற்ற வேண்டும் என்று அம்மாவின் வார்த்தைகளை வேதவாக்காக கொண்டு மக்கள் பணியாற்றுவதோடு, புரட்சித்தலைவர் புரட்சித்தலைவி அம்மா ஆகியோர் கட்டிக் காத்த இந்த மாபெரும் மக்கள் இயக்கத்திற்கு வரலாற்று சரித்திரம் படைக்கும் வகையில் கழக உறுப்பினர்கள் சேர்க்கை மற்றும் புதுப்பித்தல் பணியில் இரண்டு கோடி தொண்டர்களை கழகத்தில் இணைத்திட இலக்காக வைத்து, இந்த 75 நாட்களில் ஒரு கோடியே,60 லட்சம் உறுப்பினர்களை சேர்த்து தாய் தமிழ்நாட்டில் புதிய வெற்றி சரித்திரம் படைத்து காட்டியுள்ளார். உலக அரசியல் கட்சிகளின் அதிக உறுப்பினர்கள் எண்ணிக்கையில் உலக அளவில் 7வது இடத்திலும், இந்திய அளவில் மூன்றாவது இடத்திலும், தமிழகத்தில் முதலிடத்தில் நிலை நிறுத்தி, கழகத்தின் புகழை இமயத்தின் உச்சிக்கு எடுத்து சென்று இயக்கத்தில் மூன்றாவது அத்தியாயம், கழக பொதுச் செயலாளர், வருங்கால முதலமைச்சர், சட்டமன்ற எதிர்க்கட்சி தலைவர் எடப்பாடியார் தலைமையில், வருகின்ற ஆகஸ்ட் 20 ஆம் தேதி மதுரையில் வீர வரலாற்றில் பொன்விழா எழுச்சி மாநாடு நடைபெறுகிறது. இந்த மாநாட்டை புரட்சித் தலைவர், புரட்சித்தலைவி அம்மா ஆகியோர் நேசித்த தென்தமிழகத்தில் தலைநகரம் மதுரை நடைபெறும் என்று அறிவித்த எடப்பாடியார் அவர்களுக்கு கழக அம்மா பேரவை சார்பிலும், மதுரை புறநகர் மேற்கு மாவட்டத்தின் சார்பில் கோடான கோடி நன்றியை தெரிவித்துக் கொள்கிறோம். இந்திய தேசமே திரும்பி பார்க்கும் வகையில், மதுரையில் முத்திரை பதிக்கும் சித்திரை திருவிழா போல நடைபெறும் இந்த மாநாட்டில், கழகத் தொண்டர்கள், பொதுமக்கள் குடும்பம், குடும்பமாக பங்கேற்று எடப்பாடியார் தலைமையில், அம்மாவின் புனித ஆட்சியை தாய் தமிழ்நாட்டில் மீண்டும் மலர்ந்திட இந்த கூட்டத்தின் வாயிலாக சூளுரை இருக்கிறோம்.

## குற்றாலம் பகுதியில் பட்டப்பகலில் அரிவாள் உள்ளிட்ட பயங்கர ஆயுதங்களை காட்டி மதுபான பாரை அடித்து நொறுக்கிய மர்மகும்பல் பரபரப்பு சிசிடிவி காட்சிகள் வெளியீடு



தென்காசி மாவட்டம், குற்றாலம் பகுதியில் இருந்து பழைய குற்றாலம் செல்லும் சாலையில் உள்ள ஆயிரப்பேரி பகுதியில் மதுபான கூடம் ஒன்று செயல்பட்டு வருகிறது. இந்த மதுபான கூட்டத்திற்கு அருகே தனி நபர்களால் பார் ஒன்று நடத்தப்பட்டு வரும் சூழலில், பார் நடத்திவரும் பாரின் உரிமையாளர்க்கும், சில நபர்களுக்கும் முன்பகை இருந்ததாக கூறப்படுகிறது. இந்தநிலையில், இன்று மதுபான கூடம் திறக்கப்பட்ட சற்று நேரத்தில் மதுபான பாருக்கு உள்ளே நுழைந்த மர்ம நபர்கள் அரிவாள் உள்ளிட்ட பயங்கர ஆயுதங்களை காட்டி பாரில் இருந்த பொருட்களை அடித்து நொறுக்கியுள்ளனர். அதனை பார்த்த பாரின் உரிமையாளர் அதிர்ச்சி அடைந்து அச்சத்தில், உடனே சம்பவம் குறித்து குற்றாலம் போலீசாருக்கு தகவல் கொடுத்துள்ளார். ஆனால், போலீசார் வருவதற்கு முன்பே அந்த மர்ம நபர்கள் அங்கிருந்து சென்ற நிலையில், இந்த சம்பவம் குறித்து குற்றாலம் போலீசார் தற்போது தீவிர விசாரணை நடத்தி வருகின்றனர். மேலும் பட்டப்பகலில் மதுபான கூட்டத்திற்கு அருகே உள்ள பாருக்குள் நுழைந்து பயங்கர ஆயுதங்களை காட்டி பாரில் இருந்த பொருட்கள் அடித்து நொறுக்கப்பட்ட சம்பவம் குற்றாலம் பகுதியில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தி உள்ளது குறிப்பிடத்தக்கது. இந்த நிலையில், இது தொடர்பான சிசிடிவி காட்சிகள் தற்போது வெளியாகி பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது குறிப்பிடத்தக்கது.

## புதுப்பாக்கம் ஊராட்சியில் சுற்றுச்சூழலை பாதுகாக்க மரக்கன்றுகள் வழங்கிய ஊராட்சி மன்ற தலைவர் ஆறுமுகம்





சென்னை:சமீபத்தில் சென்னை பசுமை வழிச்சாலையில் உள்ள முகாம் அலுவலகத்தில் 10 ஆயிரம் மரக்கன்றுகள் நடும் பணியை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் தொடங்கி வைத்தார். மக்கள் மரம் நடுவதில் பங்கேற்று அரசுக்கு உதவி புரிய வேண்டும் என்று அப்போது வேண்டுகோள் விடுத்திருந்தார். சென்னையில் சுற்றுச்சூழல் மாசுபாட்டைக் குறைக்கும் வகையில் பூங்காக்கள், சாலை தடுப்புகள், குடியிருப்பு பகுதிகள் மற்றும் பொது இடங்களில் மரக்கன்றுகள் நடப்பட்டு வருகின்றது. சென்னை மாநகராட்சி சார்பில் இதுவரை 2 லட்சத்து 84 ஆயிரத்து 924 மரக்கன்றுகள் நடப்பட்டுள்ளன. இந்த நிலையில், உலக சுற்றுச்சூழல் தினத்தை முன்னிட்டு, இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் பசுமை வழிச்சாலையில் உள்ள முகாம் அலுவலகத்தில் 10 ஆயிரம் மரக்கன்றுகள் நடும் பணியை தொடங்கி வைத்து அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் செய்தியாளர்களை சந்தித்தார் அப்பொழுது அவர் தெரிவித்ததாவது: அரசு சுற்றுச்சூழலுக்கு மிகவும் முக்கியத்துவம் கொடுத்து வருகிறது. இதற்கு மஞ்சப்பை திட்டம் ஒரு சிறந்த எடுத்துக்காட்டு. உலக சுற்றுச்சூழல் தினத்தை முன்னிட்டு பல்வேறு இடங்களில் மரம் நடும் நிகழ்ச்சி அரசு சார்பாகவும், தனியார் பங்களிப்புடனும் சிறப்பாக நடைபெற்று வருகிறது. எனவே, மக்கள் மரம் நடுவதில் பங்கேற்று அரசுக்கு உதவி புரிய வேண்டும். என்று கூறினார். அதனை மெய்ப்பிக்கும் வகையில் செங்கல்பட்டு மாவட்டம் திருப்போரூர் ஒன்றியத்தில் உள்ள புதுப்பாக்கம் ஊராட்சியில் இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டு துறை அமைச்சருமான உதயநிதி ஸ்டாலின் அறிவுறுத்துதலின்படியும் காஞ்சிபுரம் வடக்கு மாவட்ட செயலாளரும் சிறு குறு நடுத்தர தொழில் துறை அமைச்சருமான தா.மோ.அன்பரசன் ஆலோசனைப்படியும் திருப்போரூர் வடக்கு ஒன்றிய செயலாளரும் ஒன்றிய பெருந்தலைவருமான எல். இதயவர்மன் வழிகாட்டுதலின்படி ஊராட்சியில் உள்ள பொது மக்களுக்கும் சுகாதாரப் பணியாளர்களுக்கும் புதுப்பாக்கம் ஊராட்சி மன்ற தலைவர் மா. ஆறுமுகம் சுற்றுச்சூழலை பாதுகாக்கும் விதமாக மரக்கன்றுகளை வழங்கினார். மேலும் இதுகுறித்து ஊராட்சி மன்றதலைவர் ஆறுமுகம் கூறுகையில் இந்த ஊராட்சியை பொருத்தமட்டில் சுகாதாரமான குடிநீர், தூய்மையான காற்று, நிலத்தடி நீரை உயர்த்துதல், நீர் நிலைகளை பாதுகாத்தல், போன்றவற்றிற்கு முன்னுரிமை கொடுத்து வருகிறோம். இவற்றிற்கெல்லாம் மரம் இன்றியமையாதது. எனவே எதிர்காலத்தில் முழு சுகாதாரமான ஊராட்சியாக இருக்கும் என்றும் இன்று இது போன்ற மரக்கன்றுகளை வழங்கியிருக்கிறோம் என்றார் நம்பிக்கையுடன்., மேலும் பொது மக்களுக்கு கோரிக்கையாக மரக்கன்றுகளை பெற்றுக்கொண்டவர்கள் தங்கள் குடும்பத்தில் ஒரு குழந்தையை வளர்ப்பது போல் இம்மரக்கன்றுகளை வளர்த்து எதிர்கால நம் சந்ததியினர் ஆரோக்கியம் நிறைந்தவர்களாய் வாழ அர்ப்பணிப்போடு வளர்க்க வேண்டும் என கேட்டுக்கொண்டார்.

## திண்டுக்கல் தமிழக வாழ்வுரிமைக் கட்சியின் மாநகர மத்திய மாவட்டம் சார்பாக கொடியேற்று விழா



தமிழக வாழ்வுரிமைக் கட்சியின் தலைவரும், பண்ருட்டி சட்டமன்ற உறுப்பினருமான தி. வேல்முருகன் ஆணைக்கிணங்க திண்டுக்கல் தமிழக வாழ்வுரிமைக் கட்சியின் மாநகர மத்திய மாவட்டம் சார்பில் கொடியேற்று விழா நிகழ்ச்சி நடைபெற்றது. கொடியேற்று விழா நிகழ்ச்சிக்கு தமிழக வாழ்வுரிமைக் கட்சியின் மாநகர செயலாளர் சு.அலெக்ஸ் தலைமை தாங்கினார். நிகழ்ச்சிக்கு வாழ்வுரிமைக் கட்சியின் மாநில செயற்குழு உறுப்பினர் முகமது அலிஜின்னா, கிழக்கு மாவட்ட தலைவர் செல்லப்பாண்டி, மாவட்டத் துணைத்தலைவர் வி.ஆறுமுகம், திண்டுக்கல் மாவட்ட ஊடக பிரிவு ஒருங்கிணைப்பாளர் பா.இப்ராகிம்கான், மாவட்ட இளைஞரணி செயலாளர் ராமச்சந்திரன் ஆகியோர் முன்னிலை வகித்தார்கள். நிகழ்ச்சியில் மாநில வழக்கறிஞர் அணி பி.விவேக் யூஜின்குமார் வரவேற்புரையாற்றினார். தமிழக வாழ்வுரிமைக் கட்சியின் கொடியேற்று விழாவிற்கு சிறப்பு அழைப்பாளர்களாக தமிழக வாழ்வுரிமை கட்சியின் தென்மண்டல பொறுப்பாளரும், மாநில ஊடகப்பிரிவு தலைமை ஒருங்கிணைப் பாளருமான வடலூர் சோதி. குமரவேல், தலைமை நிலைய பேச்சாளர் திருவொற்றியூர் மாரிமுத்து, திண்டுக்கல் மத்திய மாவட்ட செயலாளர் மு.பெரியசாமி, மாவட்ட பொருளாளர் சு. வேளாங்கண்ணி ஆகியோர் கலந்து கொண்டு கொடியேற்றி சிறப்புரை ஆற்றினார்கள். தமிழக வாழ்வுரிமைக் கட்சியின் கொடியேற்று நிகழ்ச்சி வத்தலக்குண்டு பைபாஸ், வேடப்பட்டி, குமரன்திருநகர் ஆகிய மூன்று இடங்களில் கொடியேற்றப்பட்டது. அதனைத் தொடர்ந்து ஏழை, எளிய மக்களுக்கு உணவு பொட்டலங்கள் வழங்கப்பட்டது. இதில் 16வது வார்டு செயலாளர் சந்தியாகு, பொறுப்பாளர் முத்து உட்பட தமிழக வாழ்வுரிமைக் கட்சியின் மாவட்ட, மாநகர,ஒன்றிய, கிளை, இளைஞர் அணி நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.

## வீடற்ற கட்டுமான தொழிலாளர்களுக்கு 3 சென்ட் வீட்டுமனையும் தரமான கான்கிரீட் வீடு கட்டி தர வேண்டும் போன்ற 16 அம்ச கோரிக்கைகளை மத்திய, மாநில அரசுகள் நிறைவேண்டும் கட்டுமான தொழிலாளர்கள் சம்மேளன மாநாட்டில் தீர்மானம் நிறைவேற்றம்

மார்க்சிஸ்ட் லெனினிஸ்டு கம்யூனிஸ்டு கட்சியின் தொழிற்சங்கமான அகில இந்திய கட்டுமான தொழிலாளர்கள் சம்மேளனத்தின் சார்பில் 4வது அகில இந்திய கட்டுமான தொழிலாளர்கள் சம்மேளன மாநாடு கன்னியாகுமரி சிங்காரவேலர் திட லில் நேற்று செங்கொடி ஏற்றியும் ஸ்துபிக்கு வீரவணக்க செலுத்தி தொடங்கி 3 நாட்கள் இந்த மாநாடு நடைபெறு கிறது. மாநாட்டில் கார்மல் வரவேற்று பேசினார். ஜஸ்டின், சுந்தர், அர்ஜூனன், பாலைய்யா, தங்கலெட்சுமி ஆகியோர் முன்னிலை வகித்தனர். ஏ.ஐ.சி.சி.டி.யூ. மாநில துணைத்தலைவர் எஸ்.எம். அந்தோணிமுத்து தலைமை தாங்கி பேசினார்.ஏ.ஐ.சி.சி.டி.யு. அகில இந்திய தலைவர் சங்கர் மாநாட்டை தொடங்கி வைத்து பேசினார். பொதுச்செயலாளர் ராஜீவ் டிம்ரி, பீகார் எம்.எல்.ஏ. வீரேந்திர குப்தா, லெனினிஸ்டு கம்யூனிஸ்டு கட்சி மாநில தலைவர் ஆசைத்தம்பி, அகில இந்திய கட்டுமான தொழிலாளர்கள் சம்மேளன மாநில தலைவர் பாலசுப்பிரம ணியன், பொதுச்செயலாளர் சர்மா மற்றும் பலர் சிறப் புரையாற்றினர். இதில் தொழிலாளர்களுக்கு தினமும் ரூ.1000ம், மாதம் ரூ.28,000 கூலி வழங்கவேண்டும், தொழிலாளர் குடும்பத்திற்கு 5 சென்ட் இலவச வீட்டுமனை வழங்க வேண்டும், தொழிலாளர் குழந்தைகளுக்கு வேலை வாய்ப்பிற்கான உயர் தர கல்வி வேண்டும், தொழிலாளர் இயற்கை மரணத்திற்கு ரூ.5 லட்சம் நிவா ரண நிதி வழங்க வேண்டும் என்பன போன்ற கோரிக் கைகள் இந்த மாநாட்டில் வலியுறுத்தப்படுகிறது. மாநாட்டில் புதிய நிர்வாகிகளும் தேர்வு செய்யப்பட் டனர். இதில் கட்டுமான தொழிலாளர்கள் சம்மேளன மாநில தலைவராக எஸ்.எம். அந்தோணிமுத்து, சிறப்புத் தலைவராக கோவிந்தராஜ், பொதுச்செயலாளராக இர ணியப்பன் ஆகியோர் தேர்வு செய்யப்பட்டனர்.



திருப்பரங்குன்றம் அருகே சரஸ்வதி நாராயணன் கல்லூரியில் நடைபெற்ற நேரு யுவ கேந்திரா மாணவர்கள் கலாச்சார கலை விழாவில் நடைபெற்றது. இதில் விருதுநகர் எம்.பி.மாணிக்கம் தாகூர் கலந்து கொண்டார். விழாவில் மதுரை மாநகராட்சி ஆணையர் பிரவிண்குமார் நேரு யுவ கேந்திரா இயக்குனர் செந்தில்குமார், சரஸ்வதி நாராயணன் கல்லூரி முதல்வர் ராஜேந்திரன் ஆகியோர் கலந்து கொண்டனர் இந்நிகழ்ச்சியில் 500க்கும் மேற்பட்ட மாணவ மாணவிகள் கலந்து கொண்டனர்.

செய்திகள் மற்றும் விளம்பர தொடர்புக்கு 9944419854 9600711101

Published by **M.HITLERSUNDARRAJAN** Printed by **M.HITLERSUNDARRAJAN** On behalf of **M.HITLERSUNDARRAJAN** Printed at **SEMAN GRAPHICS**, No.7/253, K.V.N.Puram, 2nd street, Kilpauk Gaden,Chennai-600010. and Published From No.8/19,C.G.Colony, 4th Street, 2nd Floor, Kasimedu, Rayapuram, Chennai-600013. Editor **M.HITLERSUNDARRAJAN**